<u>சாதாரணக்கூட்டம்</u>

**விளம்பி வருடம் வைகாசி மாதம் 15ஆம் தேதி 2019ம் வருடம் மே மாதம் 29ம் தேதி (29.05.2019) புதன் கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற அம்பாசமுத்திரம் நகர் மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை: திரு.ஜெ.பிரேம்ஆனந்த்,B.Sc.,**
தனி அலுவலர்/ஆணையாளர்
அம்பாசமுத்திரம் நகராட்சி

**<u>பொருள் எண்: 1</u>**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் குடிநீர் விநியோக பிரிவில் மின்பணியாளர் நிலை –1 ஆக பணிபுரியும் திரு.சு.ராஜன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண்.WP.No.18212/2017க்கு அம்பாசமுத்திரம் நகராட்சியின் சென்னை உயர்நீதிமன்ற சட்ட ஆலோசகர் திரு.எம்.லோகநாதன்,B.Sc.,M.L., என்பவரால் எதிர்வாதுரை தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்தமைக்கு, அன்னாரது 29.04.2019ம் தேதிய பில்படி வழக்கு கட்டணம் ரூ.5000/– வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 457 / அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்: 2</u>**

2019 இந்திய நாடாளுமன்ற தேர்தல் – திருநெல்வேலி பாரளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் உள்ள வாக்குசாவடிகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தமைக்கும் மற்றும் அம்பாசமுத்திரம் வருவாய் வட்டாட்சியர் அவர்களது கடிதம் ந.க.எண்.இ1/301/2019, நாள்.12.04.2019ன்படி அம்பாசமுத்திரம் S.T.C. நடுநிலைப்பள்ளியில் வாக்குசாவடி எண்.139ல் மாதிரி வாக்குச்சாவடி அமைத்தமைக்கும், அம்பாசமுத்திரம் ஸ்ரீ முத்தாரம் சாமியானா பந்தல் & டெக்கரேஷன் உரிமையாளர் திரு.மு.சிவகுருநாதன் என்பவரது பில்படி ரூ.13625/– வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 458 / அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்: 3</u>**

அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியிலுள்ள அருள்மிகு ஸ்ரீ அகஸ்தியர் கோவில் சித்திரை திருநாள் 8ஆம் திருவிழாவிற்கு பக்தர்கள் அங்கபிரதட்சணம் செய்வதற்காக வீதிகளில் டேங்கர் லாரி மூலம் தண்ணீர் தெளிப்பதற்காகவும், 2019 பாராளுமன்ற தேர்தலுக்காக அமைக்கப்பட்ட வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு தண்ணீர் வசதி செய்ததற்காகவும், வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி லோடு ஒன்றுக்கு ரூ.1050/– கொடுத்துள்ள திரு.வி.ஆர்.வெள்ளைச்சாமி, அம்பாசமுத்திரம் என்பவரது விலைப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 459 / அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்: 4</u>**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் குடிநீர் விநியோகப்பிரிவில் பணிபுரியும் கீழ்க்காணும் பணியாளர்கள் வாகன முன்பணம் தலா ரூ.50,000/– வீதம் வழங்கிட கேட்டு வரப்பெற்றுள்ள விண்ணப்பங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலணைக்கும்.

1. திரு.த.சரவணன் – மின்பணியாளர் நிலை–1
2. திரு.சி.பாஸ்கர் – குழாய் ஆய்வாளர்

**அலுவலக குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 460 / அனுமதிக்கப்பட்டது**

**(ஒப்பம்) <u>J,பிரேம்ஆனந்த்,</u>**
**தனி.அலுவலர்/ஆணையாளர்**
அம்பாசமுத்திரம் நகராட்சி

//உண்மை நகல்//

**ஆணையாளர்(பொ)**
அம்பாசமுத்திரம் நகராட்சி